பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 04 2026** **6 45**

**திங்கட்கிழமை** **காலை**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

2. சென்னையில் மழை பெய்தால் அந்த பாதிப்பே தெரியாத அளவிற்கு வடிகால் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

4. திராவிட கட்சிகளின் ஆட்சியில் சேவைத்துறைகள் தனியார்மயமாகி விட்டதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி 54 ரன் வித்தியாசத்தில் - லக்னோ அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

மாநிலம் முழுவதும் அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது கட்சி மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிரமாக வாக்கு சேகரித்து வருகின்றனர்.

வீதி வீதியாக சென்று வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்கள்.

தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில், தேசிய தலைவர்களும் மாநிலத்தில் முகாமிட்டு பொதுக்கூட்டங்களில் உரையாற்றி வருகின்றனர்.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை மயிலாப்பூர், ஆயிரம்விளக்கு, தி.நகர், திருவொற்றியூர் ஆகிய தொகுதிகளில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

சென்னையில் மழை மற்றும் வெள்ளம் ஏற்பட்டால் அந்த பாதிப்பே தெரியாத அளவிற்கு மழைநீர் வடிகால் கட்டமைப்பை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளதாக பிரச்சாரத்தின்போது அவர் கூறினார்.

ஏழை மக்களுக்காக நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் ஏராளமான குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவான நிலை காணப்படுவதாக திரு. ஸ்டாலின் கூறினார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நேற்று நாமக்கல், கரூர், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அளித்த 525 வாக்குறுதிகளில் நான்கில் ஒரு பங்கை கூட நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

கடந்த 5 ஆண்டுகளில் டாஸ்மாக் மட்டுமல்லாமல், நகராட்சி நிர்வாகம் உட்பட பல்வேறு துறைகளில் முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நகராட்சித் துறையில் நடைபெற்ற முறைகேடு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அமலாக்கத்துறைக்கு உயர்நீதிமன்றம்

உத்தரவிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் நேற்று தேவகோட்டையில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

திராவிட கட்சிகளின் ஆட்சியில் சேவைத்துறைகள் தனியார்மயமாகி விட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

முக்கியமான துறைகள் அரசிடம் இருக்கும்போது பொதுமக்களுக்கு தரமான சேவைகள் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

தங்களது கட்சி ஆட்சிக்கு வந்தால் மாநிலத்தில் தற்சார்பு பசுமைப் பொருளாதாரத்திற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. சீமான் தெரிவித்தார்.

இந்நிலையில் தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்த அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

வாக்குச்சாவடிகளில் போதிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

கோடைக்காலம் என்பதால் பொதுமக்கள் சிரமமின்றி வாக்களிக்க பல இடங்களில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு நாளன்று வாக்குப்பதிவு குறித்த தகவல்களை 2 மணி நேரத்திற்கு ஒருமுறை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட மாற்று ஆவணங்களைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ஈரோடு மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 198 செகண்ட்ஸ்)

<<<<>>>>

விருதுநகர் அருகே நேற்று ஏற்பட்ட பட்டாசு ஆலை விபத்தில் 23 பேர் உயிரிழந்ததை அடுத்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து ஆலையின் உரிமையாளரை தேடி வருகிறார்கள்.

அனுமதிக்க வேண்டிய தொழிலாளர்களை விட கூடுதல் தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தியதும், வேதிவினை மாற்றத்தால் வேதிப்பொருள் வெடித்து 23 பேர் உயிரிழந்ததாகவும் காவல்துறையின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 7 பேருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நேற்றிரவு மீட்புப் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது எதிர்பாரதவிதமாக மீண்டும் வெடி விபத்து ஏற்பட்டதில் தீயணைப்பு படையினர் காயமடைந்தனர்.

இந்த விபத்து மிகுந்த வேதனையளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை காணப்படும் என்றும், கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிக வெப்பம் காணப்படும் என்பதால் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தங்கள் நாட்டுக்கு சொந்தமான வணிக கப்பலை அமெரிக்கா பிடித்து வைத்துள்ளதால், உரிய நேரத்தில் பதிலடி தரப்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

-------------

இலங்கை தமிழர் நலனில் இந்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

-------------

ஜம்மு-கஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் அமெரிக்காவை சேர்ந்த 2 சுற்றுலா பயணிகளிடம் செயற்கைக்கோள் தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டது.

-------------

உத்தராகண்ட் மாநிலம் நைனிடால் மாவட்டத்தில் மலைப் பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

-------------

தமிழக காவல்துறையின் உளவுப் பிரிவு தலைமை அதிகாரியாக இருந்த திரு. செந்தில் வேலன் மாற்றப்பட்டு அவருக்கு பதிலாக திரு. அவினாஷ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

-------------

ஆற்காடு தொகுதியில் வாக்காளர்களுக்கு விநியோகம் செய்ய வைத்திருந்ததாக கூறி 4 வீடுகளில் இருந்து 250 அரிசி மூட்டைகளை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் நேற்று பள்ளி மாணவ-மாணவிகள் கலந்துகொண்ட விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு ஏகாம்பர நாதர் ஆலயத்தில் விடையாற்றி உற்சவத்தையொட்டி, புஷ்ப பல்லக்கு வீதி உலா நேற்று நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி **54** ரன் வித்தியாசத்தில் — லக்னோ அணியை வென்றது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்புக்கு **254** ரன் எடுத்தது.

**255 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய லக்னோ அணி, 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 200 ரன் மட்டுமே எடுத்தது.**

**அகமதாபாதில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**